[1987 நவம்பர் 11

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பல கோயில்களுக்கு அறங்காவலர் குழுக்கள் இல்லை. அங்கு அறங்காவலர் குழு உடனடியாக நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, டி.சி., ஏ.சி. மற்றும் அவரல்லாமல் மாவட்ட மண்டலக் குழு அமைக்கிற எல்லா வகைக் கோயில்களுக்கும் அறங்காவலர் குழு நியமிக்கப்பட்டு வந்து கொண்டிருக்கிறது.

தாட்கோ மூலம் வீடுகள் கட்டும் திட்டம்.

57—(*வினா எண் 9799) திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓமலூர், காடையாம்பட்டி ஒன்றியங்களிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு 1986-87 ஆம் ஆண்டில் தாட்கோ மூலம் வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சேலம் மாவட்டம், ஓமலூர், காடையாம்பட்டி ஒன்றியங்களிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு 1986-87 ஆம் ஆண்டு தாட்கோ மூலம் வீடுகள் கட்டுவதற்கு மானியம் வழங்க செயற்குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது. மேற்படி ஒன்றியங்களிலுள்ள கிராமங்கள் தெரிந்தெடுக்கப்பட்ட பின் இது பற்றி ஆணை வெளியிடப்படும்.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஆதிவாசிகளுக்கு கறவை மாடுகள் வழங்கும் திட்டம்.

58—(*வினா எண் 10394) திரு. கே. உச்சி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், ஆலணகட்டி பகுதியில் உள்ள ஆதிவாசி மக்களுக்கு, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கறவை மாடுகள் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படுத்தப்படும்?

1987 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (Hill Area Development Programme) நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு ரூ. 33.87 இலட்சம் புதிய திட்டங்கள் நிறைவேற்ற 50 சதவிகிதம் கடன் மற்றும் 50 சதவிகிதம் மானியமாக அ[illegible]தில் ஆனைகட்டிப் பகுதியில உள்ள ஆ[illegible] மக்களுக்கு கறவை மாடுகள் வழங்குவதற்காக ரூ. 1.38 இலட்சம் வழங்கப்பட்டது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, 31—3—1986 [illegible]றவுச் சங்கங்கள் ஆதிவாசிகளுக்கு [illegible]கள், 10 கறவை மாடுகள் வாங்கி அளித்துள்ளன.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் 1986-87 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? அதில் எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு பழங்குடியினருக்கு 430 கறவை மாடுகளும், அதேபோல் ஆதி திராவிடர்களுக்கு 13,500 கறவை மாடுகளும்—ஆக மொத்தமாக 32 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மிகவும் காட்டுப் பகுதி. அந்தப் பகுதியில் ஆதிவாசிகள் மிகவும் அதிகம். ஆகவே இன்னும் சற்று அதிக அளவில் பயன் தரும் அளவிற்கு, அந்தத் தொகையை அதிகரிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் ஒரு கறவை மாடு வாங்குவதற்கு ரூ. 2,500 கொடுக்கிறோம். அந்தத் தொகையை அதிகப்படுத்துவதற்கு அரசின் பரிசீலனைக் குறிப்பு இல்லை. மக்களுக்கு அதிகமாகக் கொடுக்கின்ற அளவில் அங்கிருக்கின்ற மலைவாசிகளுக்கு உள்ள பொருளாதார நிலைமையை அடிப்படையாகக் கொண்டு அது ஆவன செய்யப்படும்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13,000 ஆதி திராவிட மக்களுக்கு கறவை மாடுகள் வழங்கி இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நான்

சென்ற சட்டமன்ற கூட்டத் தொடரிலே கூட ஆதி திராவிட நலத் துறை மானியத்தின்மீது பேசுகின்றபோது காஞ்சீபுரத்திலே இருக்கின்ற செம்பரம்பாக்கம் என்கின்ற பகுதியிலே கிட்டத்தட்ட 23 ஆண்டுகளாக ஒரு அரிசன கூட்டுறவுச் சங்கம் நடத்திக் கொண்டு வருகிறார்கள் அவர்களுக்கு இதுவரையிலும் அரிசன நலத் துறையின் மூலமாக ஒரு கறவை மாடு கூட கொடுக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டியும் இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இனி மேலாவது அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட கூட்டுறவுச் சங்கம் மூலமாக அதை நடத்துவார்களானால் கறவை மாடுகள் வழங்குவதைப் பொறுத்தவரையில் பால்வளத் துறை மூலமாக அதனுடைய ஆணையர் சம்பந்தப்பட்டு கொடுக்கப்படுகிறது. ஆதி திராவிட நலத் துறையைப் பொறுத்தவரையில் மானியத் தொகை மட்டும் ஒதுக்கி, மக்களுக்கு வழங்கப்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில், அங்கே வழங்கப்படாமல் இருக்குமானால், அந்த ஆணையருக்கு உடனடியாக தாக்கீது அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தில், ஆதிவாசி கிறுத்துவர்களுக்கு கொடுக்கப்படவில்லை என்று புகார் வந்துள்ளது. அதுகுறித்து மறு பரிசீலனை செய்து அவர்களுக்கும் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட கிறுத்துவர்களுக்கும், ஆதிவாசிகளுக்கும் கறவை மாடுகள் வழங்குவதற்கு சட்டத்திலே இடமிருக்கிறது; வழங்கிக்கொண்டு இருக்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், எங்கேயாவது கொடுக்கப்படவில்லையென்று குறிப்பிட்டுச் சொல்வார்களானால், அங்கே கொடுக்கப்படாமல் இருக்குமானால், அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில், ஆதி திராவிட தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. அதற்கு ஆதி திராவிட

1987 நவம்பர் 11]

நலத் துறை மூலமாக ஏதாவது நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறதா? அப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தால் அதனுடைய விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

தலைஞாயிறில் ஆதி திராவிட மாணவர் விடுதி.

59—(*வினா எண் 11910) **திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தலைஞாயிறில் ஆதி திராவிட மாணவர் விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். பயிற்சி நிலையம்.

60—(*வினா எண் 13892) **திரு. செ. இரத்தினவேலு மற்றும் திரு. சா. ஞானசுந்தரம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர் நலத்துறை மூலம் நடத்தப்படுகின்ற ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். பயிற்சி நிலையத்தில் பயின்ற மாணவ—மாணவியர்களில் கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக யாரும் தேர்ச்சி பெறவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பெற்ற நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.